முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1531

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.12.2023,** வெள்ளிக்கிழமை

1. தவராஜனே தர்மபலம் கொண்ட அரங்கனே
தன்னார்வ தொண்டுதனை உலகமெல்லாம் நிரப்பி
அவதாரமாக அற்புதம் நடத்துகின்ற குருராஜனே
அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 22 ம் நாள், 08.12.2023, வெள்ளிக்கிழமை)
வரமாக அரங்கன் நீ
செய்யும் தர்மமும் தவமும்
வையகத்தை காத்து அருள்புரியுமப்பா
3. அப்பனே அரங்கன் உன் தர்மத்துக்கு
மிஞ்சிய தர்மம் உலகில் இல்லை
அரங்கன் உன் தொண்டர்படைக்கு
மிஞ்சிய ஞானப்படைகளும் உலகில் இல்லை
4. அன்னதனால் அரங்கன் உன் வழி
ஆறுமுகன் பேரற்புதம் உலகில் நடத்த உள்ளேன்
உள்ளபடி உன்னோடு தொடர்ந்து வரும்
ஒவ்வொரு அன்பர்களும் உலகத்தில் கலியுகத்தின் ஞானிகளாக
5. வகைபட ஆற்றல் கூடி
வருங்காலத்தில் ஞானயுகமாற்றம்
மாற்றம்தனை உன் அவதாரத்தின் நோக்கமாக
மண்ணுலகில் நடத்தி பேரற்புதம் புரிவர்
6. ஆகவே அரங்கனின் படைகள்
அகிலத்தை மாற்றுவதும் ஆள்வதும்
அகிலத்துக்கு பாதுகாப்பும் அற்புதமும்
தருவதும் உறுதி உறுதி

7. வகைபட அரங்கனின் இந்த
அவதாரம் புரிந்துணர்ந்து உலகோர்
வணங்கி வந்தால் போதும்
வையகத்துக்கு எல்லா மாற்றமும் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–